University, Sri

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II 1999/2000 (வெளிவாரி)

(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

# PHY 302 நவீன மேலைத்தேய சிந்தனைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. "அறிவு அனுபவத்திலிருந்தே ஆரம்பமாக வேண்டும். ஆனால் அதிலிருந்து தோன்ற வேண்டியதில்லை"

    - காண்ட்டின் மேற்படி கூற்றினை அவரது அறிவாராய்ச்சியியற் கருத்துக்களின் பின்னணியில் ஆராய்க.

02. ஹெகலின் (Hegel) கருத்தியல்வாத (Idealism) சிந்தனைகளின் பிரதான பண்புகளை விளக்குக.

03 "மொழியினின்றும் சுயாதீனமாக உலகம் இருக்க முடியாது" - மேற்படி கூற்றினை இளைய லிட்கைன்ஸ்ட்டைனின் மெய்யியற் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

04. பகுப்பாய்வு மெய்யியல், சிந்தனைக்கூடமாக அல்ல, மெய்யியல் இயக்கமாகவே வளர்ச்சியடைந்தது.

    மேற்படி கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

05. தர்க்கப் புலனறிவாதம் என்றால் என்னவென விளக்கி, இம் மெய்யியல் இயக்கம் அதன் இலக்கை வெற்றிகரமாக எய்திக்கொண்டதாவென ஆராய்க.

06. மார்க்சிய மெய்யியலின் பிரதான பண்புகளை விளக்குக.

07. இறைமறுப்பு இருப்புவாதிகளில் 'நீட்சே' யின் சிந்தனைகளைத் தெளிவுபடுத்துக.

08. வில்லியம் ஜேம்ஸ் என்பார் முன்வைத்த பயன் நிலைவாத (Pragmatism) சிந்தனைகளை தொகுத்துக்கூறுக.

09. கட்டமைப்பியல் வாத சிந்தனைக்கும், பிற்கட்டமைப்பியல்வாத சிந்தனைக்குமிடையே நீர் காணும் வேறுபாடுகளை விளக்குக.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு குறிப்புகள் எழுதுக.

    1. 'காண்ட' இன் ஒழுக்க கருத்துக்கள்
    2. வாய்ப்பு பார்த்தல் கோட்பாடு
    3. அந்நியமாதல்
    4. பிரத்தியேக மொழி (Private Language) வாதம்.